REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 22உ சனி (4—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 23உ ஞாயிறு (5—5—57) இதழ் [279

கவர்னர் உரை பாராட்டுதெற்குரியதாயில்லை

மாநில மந்திரிகள் டெல்லிக்கு 'ஆமாம்' போடுகின்றனர்

தேர்தலில் பாரபட்சம் காட்டப்பட்டது

மந்திரிகள் அதிகார தோரணையுடன் ஓட்டு வேட்டையில் ஈடுபட்டனர்

சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி முழக்கம்

"நெய்வேலி பெரிய வரப்பிரசாதம்—என்று நமது மந்திரிகள் பேசிவருகின்றனர். நிதி மந்திரி அண்மையில் அவ்வாறு பேசினர்.

"நமது திராவிடத்தில் தொழில் வளராமல் போனதற்கு நிலக்கரி கிடைக்காததுதான் காரணம் என்று கூறப்பட்டுவந்திருக்கிறது.

"ஆனல் இப்போது 'வரப்பிரசாதம்' என்று வர்ணிக்கப்படுகிற நெய்வேலியில் 1960-ஆம் ஆண்டுக்குள் 16 இலட்சம் டன் நிலக்கரி தோண்டப்படுமென்றும், பின்னர் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான டன் நிலக்கரி அங்கிருந்து பெற முடியும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அப்படியானல், இப்போதாவது, நெய்வேலியிலிருந்து 70 மைல் தொலைவில் உள்ள சேலத்தில் கிடைக்கும் இரும்பை உருக்க நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்துமா சர்க்கார்? சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமையுமா?—என்பது பற்றி கவர்னர் தம் உரையில் குறிப்பிடவில்லை.

"மேலும் இதுபோன்ற தொழில்களை நிர்மாணிக்க இந்த மாகாண சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. எல்லாவற்றையும் வடநாட்டு சர்க்கார்தான் வைத்துக்கொண்டிருக்கிறது.

"இந்த மாநில சர்க்கார் ஏமாந்த சோணகிரிகளாக இருப்பதால் வடநாட்டு டெல்லி சர்க்கார் சுலபத்தில் ஏமாற்றிவிடுகிறார்கள் இவர்களை! டெல்லி சர்க்கார் எதைச் சொன்னலும், இந்த மந்திரிகள், 'ஆமாம்' போடுகிற வகையில் இருப்பதால்தான், இந்த நாட்டில் தொழில்கள் ஏற்படவில்லை.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

"இங்கிருந்து திட்டத்தை எடுத்துக்கொண்டு சென்ற கனம் நிதி மந்திரி அவர்கள், எவ்வளவோ வாதாடியும் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டுதான் வந்தார்! பாதியாகத் திட்டத்தை வெட்டி அனுப்பினர்கள் டெல்லி சர்க்கார்! இந்த நிலை, இந்த மாகாண மக்களின் நலனுக்கு உகந்ததாக இருக்கவில்லை."

—என்று தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், சென்னை சட்டசபையில், கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"கவர்னரின் உரை பாராட்டுதற்குரியதாக அமையவில்லை. அதில், அரசாங்கத்தின் கொள்கை விளக்கம் இருக்கவில்லை—திட்ட விளக்கம் இல்லை. முக்கியமான விஷயங்கள் எல்லாம் நிதி மந்திரியின் 'பட்ஜெட்' பிரசங்கத்திற்கு ஒதுக்கப்பட்டு விட்டன போலும்! அதனல்தான், 'கவர்னர் உரை பாராட்டுதற்குரியதாக இல்லை' என்கிறேன்.

"தேர்தல் சுமூகமாக நடைபெற்றதாக கவர்னர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனல் தேர்தல் பாரபட்சமற்ற முறையில் நடைபெறவில்லை. பாரபட்சமாக நடந்தது என்பதற்கான ஆதாரங்களை-விளக்கங்களை நான் தரமுடியும்.

"மந்திரிகள் மந்திரிகளாயிருந்துகொண்டே தேர்தலில் ஈடுபட்டனர். தங்கள் கார்களில் காங்கிரஸ் கட்சியின் கொடிகளைப் பறக்கவிட்டுக்கொண்டு அல்ல—மாறாக, அரசாங்கக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டே தேர்தலில் ஈடுபட்டனர்.

"இப்படி அதிகார தோரணையில் இவர்கள் தேர்தலில் ஈடுபட்டதால், இவர்களைப் புடைசூழ போலீஸ் பட்டாளம் இருந்தது. இந்த நிலையைக் காட்டி, கிராம அதிகாரிகளையும் மக்களையும் மிரட்டுகிற வகையில் நடந்துகொண்டுதான் இவர்கள் ஓட்டுச் சேகரித்தார்கள்.

"மேலும், தேர்தலில் ஈடுபட்ட எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனிச் சின்னம் வழங்கப்படவில்லை. 'இது எங்கள் பொறுப்பல்ல' என்று மந்திரிகள் கூறலாம். ஆனல், எங்களுக்குத் தனிச் சின்னம் தரப்படுவதற்கு இவர்கள் ஜனநாயக நோக்குடன் முயற்சிக்கவில்லை.

"தேர்தலில் வாக்காளர்களுக்காக வண்டி—வாகனங்கள் வைத்துக்கொள்ளக் கூடாது—என்று தேர்தல் விதி கூறுகிறது. 'இலஞ்சம் தரக்கூடாது,' என்றும் கூறப்படுகிறது; ஆனல் வண்டி வாகனங்கள் ஆளும் கட்சியினரால் வைத்துக்கொள்ளப்பட்டன; இலஞ்சமும் தரப்பட்டது......"

"இந்த நேரத்தில் சபைத் தலைவர் குறுக்கிட்டு, 'கனம் உறுப்பினர், குற்றச்சாட்டுகளை தேர்தல் நீதி மன்றத்தில் கூறலாம்—இங்கல்ல,' என்று கூறினர்.

"நான் குற்றச் சாட்டாக இதனைக் கூறவில்லை; மாறாக தேர்தல் எப்படி நடைபெற்றது என்பதை விளக்கவே கூறுகிறேன்.

"எனது தொகுதியில், நான் வெற்றிபெற்றேன். வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு தெரிந்தும் மறுநாள்தான் முடிவு அறிவிக்கப்பட்டது......."

(இப்போதும் சபைத் தலைவர் குறுக்கிட்டு, 'எனது தேர்தல் முடிவு 10 நாட்களுக்குப் பிறகுதான் அறிவிக்கப்பட்டது; இதை எல்லாம் குற்றச்சாட்டாகக் கூறலாமா?' என்றார்.]

"நான் கூறுவது வாக்குகளை எத்தனை நாளைக்குப் பிறகு எண்ணினர்கள் என்பதல்ல; மாறாக, எண்ணி முடித்து முடிவு தெரிந்தும் அறிவிக்கவில்லை—தாமதப்படுத்தினர்கள் என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

"அடுத்தபடியாக 'விலைவாசிகள் இறங்கவில்லை,' என்பதை கவர்னர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனல் விலைவாசிகள் இறங்காததற்கு — ஏற்றப்பட்டதற்கு யார் காரணம் இந்த ஆட்சியாளர்கள் விலை ஏற்றத்தைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை எல்லாம் கூறவில்லை.

"இப்போது உணவு நிலை திருப்திகரம் என்று கூறப்பட்டிருக்கிறது; இதுவும் சரியல்ல. இப்போதுள்ள சீதோஷ்ணநிலை, மாறக்கூடியதாகும். இதை நம்பி உணவு நிலை திருப்திகரமாக இருப்பதாகக் கருதிவிட முடியாது.

"மற்றும், இப்போது திணிக்கப்பட்டுள்ள 'நயா பைசா' குழப்பம் வேறு, இஷ்டம்போல விலையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுகிறது!

"தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அபிவிருத்தியும், வளர்ச்சியும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது; ஆனல், இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்டப் பகுதியில், ஒரு குறிப்பிட்டக் கட்சிக்காரர்கள் உள்ள பகுதியில் தான் அமுலாகப்படுகின்றன.

"மேலும், இவை ஆளும் கட்சியினருக்கு வேண்டியவர்களுக்கும் உற்

(4-ம் பக்கம் பார்க்க)

'பஞ்சப்படியில் பாதியையேனும் அடிப்படை சம்பளமாக்குவீர்களா?'

சர்க்கார் ஊழியர் சம்பள உயர்வு குறித்து நமது உறுப்பினர் கேள்வி

"பஞ்சப்படி என்பது, பஞ்சம் தோன்றும் காலங்களில் தரப்படுவதாகும். பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நிலைகளினல், சர்க்கார் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி தரப்பட்டது. ஆனல் இப்போதும் அது நீடிப்பது நல்லதல்ல என்பதால், தரப்படும் பஞ்சப்படியில் பாதியையேனும், அடிப்படைச் சம்பளத்தோடு சேர்த்துத் தர சர்க்கார் முன்வருமா?"

என்று, நமது தி. மு. க. சட்டசபைக் கட்சிச் செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் நேற்று சட்டசபையில் கேள்வி எழுப்பினர்.

பதிலளித்த மந்திரி சுப்பிரமணியம், 'அது சாத்தியமில்லை' என்று கூறினர்.

"நிதிக் கமிஷன் இங்கு வந்திருந்தபோது, சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு தருவது பற்றி சர்க்கார் ஏதாவது கோரிக்கை எழுப்பினரா?"

என்று, கல்யாணசுந்தரம் கேட்ட பிரதான கேள்வியை ஒட்டியே இந்த உப-கேள்விகள் எழுந்தன.

"மாநில சர்க்காரின் சம்பள நிலையை உயர்த்த மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?"

என்று, தோழர் கோவிந்தசாமி எழுப்பிய உப-கேள்விக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டு, மந்திரி சுப்பிரமணியம், தனிக் கேள்வி கேட்குமாறு கூறினர்.

"கிராக்கிப்படியை மத்திய சர்க்கார் விகிதத்திற்கு உயர்த்துவதற்கே எட்டரை கோடி ரூபாய் வரை செலவாகுமென நாங்கள் அஞ்சும்போது, அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவது எப்படி முடியும்"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியதுடன், 'ஊழியர்களின் அதிருப்தியை எதிர்க்கட்சியினர் வளர்க்காமலிருந்தால் அதுவே போதும்,' என்று கூறினர்.

ஈ. வெ. கி. சம்பத், தர்மலிங்கம் டெல்லி புறப்பட்டனர்

அண்ணு, பொதுச்செயலாளர் மாலை அணிவித்து வழியனுப்பினர்

சென்னை, மே. 4—

டெல்லி பாராளுமன்ற தி. மு. கழக உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. தர்மலிங்கம் ஆகியோர் நேற்று மாலை 5 மணிக்கு இரயில்மூலம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து டெல்லிக்குப் பயணமாயினர்.

முதன் முறையாக பாராளுமன்றம் செல்லும் அவர்களைப் பாராட்டி வழியனுப்ப, அண்ணு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., சந்தானம் எம்.எல்.ஏ., இரா. செழியன், அ. பொன்னம்பலனர், கண்ணதாசன், முகவை- ஆர். எஸ். பாண்டியன், எஸ். எஸ். பி. லிங்கம், எஸ். எஸ். தென்னரசு, குன்னத்தூர் டி. என். சம்பந்தம், சேலம்-இராசாராம், டி. கே. பொன்னுவேலு, மற்றும் நூற்றுக் கணக்கான கழகத் தோழர்கள், இரயில்வே, தபால்-தந்தி இலாகா ஊழியர்கள், இதர துறைத் தொழிலாளர்கள் எல்லாம் வந்திருந்தனர்.

தோழர்கள் சம்பத், தர்மலிங்கம் ஆகியோருக்கு அண்ணு அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் மாலை அணிவித்தபொழுது கூடியிருந்தோரின் கையொலி, இரயில் நிலையத்தை அதிர வைத்தது.

ஏராளமான தோழர்கள் பின்னர், மலர் மாலைகள் அணிவித்ததுடன், புத்தகங்கள் போன்றவற்றையும் பரிசளித்தனர்.

இரயில் சரியாக 5-10 மணிக்கு புறப்பட்டபோது, கூடியிருந்தோர், 'டில்லி செல்லும் சம்பத், வாழ்க,' 'அண்ணு வாழ்க,' 'நெடுஞ்செழியன் வாழ்க,' திராவிட நாடு திராவிடருக்கே,' என்று ஒலிமுழக்கம் எழுப்பி, எம்.பி.-க்களை வழியனுப்பி வைத்தனர்.

சம்பத் அவர்களும், தர்மலிங்கம் அவர்களும் கைகூப்பி நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டனர்.

சம்பத் அவர்களின் அன்னையார், சகோதரியார் குழந்தைகள். இருவர் ஆகியோரும் இரயில் நிலையம் வந்து வழியனுப்பினர்.

சம்பத் அவர்களுடன் சட்டக் கல்லூரி மாணவரான கரூர் தோழர் மாணிக்கம் அவர்களும் சென்றுள்ளார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 4—5—57 சனி

பர்மாவாழ் 'இந்தியர்கள்'

இந்தியத் துணைக் கண்டமும்—பர்மாவும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமைபட்டுக் கிடந்த காலம் பழங்கதையாகி விட்டது. அதுபோன்றே, இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு உறுப்பாக பர்மா நாடும் பிணைக்கப்பட்டுக் கிடந்ததும் பழங்கதையாகிவிட்டது.

பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுக்கிடந்த நாடுகள் அனைத்திலும், அந்த ஏகாதிபத்திய இணைப்பை உறுதுணையாகக் கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தைத் தாயகமாகக் கொண்ட பல்வேறு வகைப்பட்ட மொழிவழி மக்களும், விரும்பியோ, விரும்பாமலோ குடியேறலாயினர். அவ்வாறு குடியேறிய இந்தியத் துணைக் கண்ட மக்களில் பெருந்தொகையினராக இருப்பவர்கள் தமிழ் மக்களேயாவர்.

ஆங்கில ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் பெருந்திரளாக அன்று குடிபுகுந்த தமிழ் மக்களில், தம் மிச்சையாகச் சென்றவர்களை விட, மேற்படி ஏகாதிபத்தியத் துணையுடனும் தூண்டுதல் மீதும் வலுவில் கடத்திச் செல்லப்பட்டவர்களே மிகுதியானவர்கள்.

இந்தியத் துணைக்கண்டத்து மக்களை, தனது ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளுக்குக் கடத்திச்செல்லுவதென்பது, அவ்வாறு கடத்திச்செல்லப்பட்ட காலத்தில் மிகமிகச் சாதாரண பிரச்சினையாக இருந்தது. அவ்வாறு ஒரு நாட்டு மக்களை வேறு நாடுகளுக்குக் கடத்திச் சென்று, அந்தந்த நாடுகளில் குடியேற்றி வைப்பது என்பதில் உள்ளடங்கியிருக்கும் பயங்கர விளைவு குறித்து அன்று ஏகாதிபத்தியம் சிந்திக்கத் தவறி விட்டது. ஒருவேளை சிந்தித்திருந்தாலும், தன் சுய இலாபம் கருதி ஏகாதிபத்தியம் அதைத் தவிர்க்க விரும்பாமல் இருந்திருக்கவும் கூடும்.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு, தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தின் துணைகொண்டு, இந்தியத் துணைக்கண்டத்து மக்களில் பல்வேறு மொழிவழி மக்களைக் கடத்திச் சென்று, அவர்களுடைய உழைப்பை உறிஞ்சி தான் கொழுப்பது ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எளிதான காரியமாக இருந்தது. ஆனால், வெளிநாடுகளில் குடியேற்றப்பட்டுள்ள இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் வழிவந்தவர்களுக்கு, அவர்கள் வாழ்ந்து வரும் ஒவ்வொரு நாட்டிலும், இன்று ஏற்பட்டுள்ள சொல்லொணாத் துன்பங்களுக்கு பரிகாரம் காணுவது என்பது எளிதில் முடியக்கூடியதாக இல்லை.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களில், அதிகமான அல்லல்களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ் மக்களேயாவர். அவர்களுக்குள்ள தொல்லைகளையும் துன்பங்களையும், வெளிநாடுகளில் குடியேறியுள்ள வேறு இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அடைந்து வரும் தொல்லைகளுடனும் துன்பங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, தமிழ்மக்கள் அடைந்து வருபவையே எல்லாவற்றையும்விட முன்னணியில் இருந்துவருகின்றன என்றே குறிப்பிட வேண்டியவர்களாகின்றோம்.

இதுவரையில், இலங்கையில் குடியேறிய தமிழ் மரபினர்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் மட்டுந்தான் உலக மக்களுக்கு உணர்த்தப்பட்டு வந்திருக்கின்றது. இப்பொழுது, பர்மா வாழ் தமிழ் மரபினர்களையும் துன்பம் தீண்டத் தொடங்கி விட்டிருக்கிறது என்பது உலகுக்கு உணர்த்தப்படுகிறது.

பர்மா நாட்டில் வாழ்ந்து வரும் இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் பல்வேறுவகையினரிலும், தமிழ் நாட்டு மக்களே பெருந்தொகையினராக உள்ளனர். அவர்கள் அங்கு பாடுபட்டுஉழைத்து, கிடைக்கப் பெறுவதில் ஒரு பகுதியை, இந்த தாயகத்தில் அவர்களை நம்பி வாழ்ந்துவரும் அபலைகளுக்கு அனுப்புவதில், பர்மா அரசாங்கம் தலையிட்டுக் கட்டுப்படுத்தத் தொடங்கி இருக்கிறது. இது விஷயத்தில் தாராளமாக நடந்துகொள்ள முடியாமைக்கு, பல நியாயங்களை பர்மா அரசாங்கத்தால் கூறுவது சாத்தியமாகும்.

அங்கு ஏற்றுமதி—இறக்குமதி போன்ற பெருத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 'இந்தியர்கள்,' தங்களுடைய இலாபத்தில் பெரும் பகுதியை, இந்தியாவில் தங்களை நம்பி வாழ்ந்துவரும் மக்களுக்கு அனுப்புவதாகக்கூறி, வெளிநாட்டு நாணயச்செலாவணி வசதியைப்பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான், இந்தச் செலாவணி கட்டுப்பாடு விதிக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்ற காரணத்தையும் பர்மா அரசாங்கம் சொல்லக்கூடும். பர்மா அரசாங்கம் கூறக்கூடிய இக்காரணம் பொருந்தக் கூடியதாக இருந்தாலும் இருக்கக் கூடும். ஆனால், மனித உணர்வுடன் இப்பிரச்சினையை அணுகி, குறைந்தபட்ச வருமானம் பெறுகிறவர்கள் விஷயத்திலாவது இச்செலாவணி கட்டுப்பாடு விதியைத் தளர்த்த பர்மா அரசாங்கம் முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக பர்மா குடிமகனாக பதிவு செய்து கொள்ளுவதில், புதிய சிக்கல் கிளம்பி இருக்கின்றது. பர்மா நாட்டில் குடியேறி வாழ்ந்துவரும் 'இந்தியர்கள்' பர்மா குடிமக்களாகத் தங்களை ஆக்கிக் கொள்வதற்காகச் சென்றவர்கள் அல்ல. ஏதாவது பாடுபட்டு பிழைக்கச் சென்றவர்களே யாவர்.

இதை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து பர்மாகுடிமகனாகப்பதிவுசெய்து கொள்ள பெரும்பாலோர் முன்வரமாட்டார்கள் என்பது நிச்சயம். அப்படியும் சிலர் குடிமகனாக விரும்பி, பதிவு செய்துகொள்ள மனு கொடுத்திருந்தும்கூட, அவர்கள் கோரிக்கை பெரிதும் பூர்த்தி செய்யப்படாமலே இருந்துவருவது வியப்புக்குரியதாகத்தான் இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் இந்தியப் பேரரசினால் அண்மையில் சட்டமாக்கப்பட்டுள்ள இந்தியக் குடிமக்கள் சட்டம்வேறு, பர்மா குடிமக்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என மனு கொடுத்திருப்பவர்களுக்குப் புதிய நெருக்கடியைத் தோற்றுவிப்பதாக இருக்கிறது. அதாவது, பர்மா குடிமக்களாக விரும்பி, மனு கொடுத்திருப்பவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்திருப்பவர்களுக்கும் இந்தியா செல்ல அனுமதிச் சீட்டு அளிக்கமுடியாது என மேற்படி புதிய சட்டம் அச்சுறுத்துகிறது. இதன் விளைவாக, இலங்கையில் காணப்படுவதுபோல் பர்மாவிலும் 'நாடற்ற நாடோடிகள்' என்று ஒரு புதிய கூட்டம் தோன்றினாலும் எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வளவையும் நோக்குமிடத்து, பொதுவாக பர்மா வாழ் 'இந்தியர்கள்' எதிர்காலம், அதிலும் குறிப்பாக அங்கு இருந்துவரும் தமிழ் மக்கள் எதிர்காலம் ஈடு செய்ய முடியாதத் துன்பத்தை நோக்கி விரைந்து கொண்டு இருக்கின்றது என்றே நாம் முடிவுகட்ட வேண்டியவர்களாகின்றோம். இந்தியப் பேரரசு என்ன செய்ய இருக்கிறதோ?

வான வெளியில் செயற்கை கிரகம்

120 மைல் உயரத்தில் அமெரிக்கா சோதனை

வாஷிங்டன், மே. 3—

செயற்கை கிரகம் ஏற்படுத்தும் முயற்சியில் ஒரு பகுதியாக அட்லாண்டிக் கடலுக்கு 120 மைல் உயரத்தில் ஒரு பறக்கும் குண்டு (ராக்கெட்)களைப் பாய்ச்சும் சோதனை ஒன்றை அமெரிக்கா நடத்தியதாம்.

மணிக்கு 3,000 மைல் வேகத்தில் இது சென்றதாகக் கூறப்படுகிறது.

பாய்ச்சல் வழியில் 120 மைல் உயரத்தை எட்டியதும் அதிலிருந்து சிறிய ராக்கெட் ஒன்று 'நேர்பார்வைத் திசை'யில் பாய்ச்சப்பட்டதாம்.

இதேபோல், மூன்றுவது கட்டத்தில் பாய்ச்சப்படும் ராக்கெட்டில்தான் செயற்கை கிரகத்தைக் ஏற்றி அனுப்பத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

'மாற்றுந்தாய் முறையில் அரசாங்கம் ஆசிரியர்களிடம் நடந்துகொள்கிறது

'பண வசதியில்லை என்று காரணம் காட்டி குறைகளைக் களைய மறுக்கிறது'

ஆமதாபாத், மே 3—

"பம்பாய் மாநில அரசாங்கம் ஆசிரியர்களை அலட்சியப்படுத்துகிறது! மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்கிறது!

"விளம்பரத்திற்காகவும், கிராமங்களில் வானொலிகளை ஏற்படுத்தவும், துவக்கப் பள்ளிகள் நிறுவவும் இலட்சக் கணக்கில் பணம் செலவிடும் அரசாங்கம், 'போதிய பணவசதி யில்லை' என்ற நொண்டிச் சாக்கைக் காட்டி, சனநாயக அமைப்புக்கு இன்றியமையாத இடம் பெற்று விளங்கும் ஆசிரியர்களின் குறைகளைப் போக்க மறுத்து வருகிறது!

"கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு வரும் இரண்டு மாபெரும் ஐந்தாண்டுத் திட்டங்கள் காலத்திலும் ஆசிரியர்கள், கண்ணியமான முறையில் குறைகளை எடுத்துரைத்து வந்துள்ளனர்.

"பம்பாய் மாநிலத்தில் கல்விக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருப்பினும், அரசாங்கத்தின் அலட்சிய — உலோபித்தனமான போக்கால் கல்விச் சாதனங்கள் இளைத்து வருகின்றன என்பதே உண்மையாகும்" என்று, அகில குசராத் ஆசிரியர் சங்கத் தலைவர், ஆசிரியர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வேலையில்லாத் திண்டாட்டம் இளம் வயதினரிடை அதிகமா?

புள்ளிவிவரவாரியாக ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, மே. 2—

வேலை தேடித்தரும் நிலையங்களில் 1956 டிசம்பர் மாத இறுதியில் பெயர் பதிவாகியுள்ள 7,58,503 பேர்களில் 3,05,104 பேர் 18 வயதிலிருந்து 22 வயதுள்ளவர்களாகவும், 2,03,275 பேர் 22 வயதிலிருந்து 25 வயதுள்ளவர்களாகவும், 1,53,425 பேர் 25 வயதிலிருந்து 35 வயதுள்ளவர்களாகவும், 40,287பேர் 18 வயதுக்குக் குறைந்தவர்களாகவும், 11,496 பேர் 45 வயதும் அதற்கு மேற்பட்டவர்களாகவும் இருந்தனராம்!

குமாஸ்தா வேலைக்காகப் பதிவாகியிருந்த 1,91,226 பேர்களில் 1,04,528 பேர் 18 வயதிலிருந்து 22 வயதுள்ளவர்களாகவும், 57,471பேர் 22 வயதிலிருந்து 25 வயதுள்ளவர்களாகவும் இருந்துள்ளனராம்.

சுருக்கெழுத்தாளர் வேலைக்காகப் பதிவாகியிருந்த 1,664 பேர்களில் 22 வயதிலிருந்து 35 வயதுள்ளவர்கள் இருந்தனர்.

'மிட்வொய்'புகள் பிரிவில், பெரும்பாலோர் அதிக வயதுடையவர்களாக இருந்தனர்; பதிவான 1,097 பேர்களில் 654 பேர் 25 வயதிலிருந்து 45 வயதுள்ளவர்களாக இருந்தனர்.

'ஓவர்சியர்'கள் பிரிவில் பெரும்பாலோர் மிகவும் இளவயதினராகஇருந்தனர்; பதிவான 555 பேர்களில் 253 பேர் 18 வயதிலிருந்து 22 வயதுள்ளவர்களாகவும், 184 பேர் 22 வயதிலிருந்து 25 வயதுள்ளவர்களாகவும் இருந்தனர் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

மணிக்கு 4,000 மைல் பறக்கும் விமானம்!

வாஷிங்டன், மே 3—

38 மைல் உயரத்தில் மணி ஒன்றுக்கு 4,000 மைல் வேகத்தில் பறக்கக்கூடிய 'எக்ஸ்—15' என்ற விமானமொன்றைத் தயாரித்து வருவதாக அமெரிக்க விமானப்படை அறிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்கு வாய்ப்பூட்டு

சென்னை அரசாங்கத்தின் திடீர் உத்தரவு?

சென்னை, மே, 3—

பள்ளிகளுக்கு உள்ளேயும், வெளியிலேயும் எந்த மதத்தினுடையவும் நம்பிக்கை அல்லது பழக்கங்கள் ஆகியவைகளுக்குப் பாதகம் ஏற்படும் வகையிலோ, கேலி அல்லது அவமானத்தையோ அவமதிக்கும் வகையிலோ கருத்துக்களைக் கூறுவது இனி தீய நடவடிக்கையாகக் கருதப்படுமாம்.

இதற்கான வகையில் சென்னை கல்வி இலாகா விதிகளில் திருத்தமொன்றை சென்னை அரசாங்கம் செய்திருக்கிறது.

தனியார் நிர்வாகத்திலுள்ள இடைநிலைப் பள்ளிகளில் எந்த ஆசிரியருடைய நடத்தையைப் பற்றியாவது விசாரணை நடைபெற்றால், அந்த விசாரணை பற்றிய குறிப்பேடுகளை வரவழைக்கவும் அதன்மீது, தகுந்ததெனக் கருதப்படும் உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் கல்வி இலாகா டைரக்டருக்கு அதிகாரமளிக்கவும் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இத்துறையில், டைரக்டர் கொடுக்க உத்தேசித்துள்ள தண்டனைக்கு எதிராக சமாதானம் கூறுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்ற விதியும் இருக்கிறதாம்.

டைரக்டர் பிறப்பிக்கும் உத்தரவுகள்மீது அரசாங்கத்திற்கு 'அப்பீல்' செய்யவும் வசதி செய்யப்பட்டிருக்கிறதாம்.

ஓவியக் கலையின் தனிச்சிறப்பு

தமிழ்வேள் பி. டி. இராசன் பாராட்டு

"ஒரு நாட்டையும் அந்த நாட்டிலுள்ள மக்களையும் அறிந்து கொள்ளவும் அவர்களின் நாகரிகம், பண்பு முதலியவற்றை இதர நாடுகள் தெரிந்து கொள்ளவும் வேண்டுமானால் அந்த நாட்டின் கலையைத் தெரிந்து கொண்டால் அந்த நாட்டு மக்களை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

"நாட்டின் முக்கியமான கலைகளில் ஓவியக் கலை ஒன்றாகும்; அந்த ஓவியக் கலையில் இந்த நாட்டு மக்களுக்கு, மேனாட்டாரைப் போன்ற ஆர்வம் இல்லை. அங்கே ஒரு ஓவியம் வரையப்பட்டால், அதை மக்களே வாங்கி அதற்கு ஆதரவு தருவார்கள். ஆனால் தமிழ்நாட்டில் வரையப்பட்ட ஓவியங்கள் கோவில்களிலேயும் -கண்காட்சிகளிலும்தான் காணமுடிகிறது.

"இந்தக் குறையைப் போக்க மதுரை தமிழ் சங்கத்தில் இக்கலையை ஆரம்பிக்க எண்ணியபோது, நான் சாதாரண மக்களின் ஆதரவைத்தான் வேண்டியிருந்தேன். இம் மாதிரியான கூட்டங்களுக்கு வரும் மக்கள் ஓவியக்கலைக்கு ஆதரவுதர வேண்டுகிறேன்."

என்று தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள், சென்னை இராசா ரவிவர்மா கலைக்கழகத்தின் சார்பில், எழும்பூரில் நடைபெற்ற இராசா ரவிவர்மாவின் 109-வது பிறந்தநாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'நாட்டோ' நாடுகளுக்குப் பறக்கும் குண்டுகள்

இலண்டன், மே 3—

8 கோடி முதல் 10 கோடி பவுன் வரை செலவிட்டு, பறக்கும் குண்டுகளை 'நாட்டோ' நாடுகளுக்கு வழங்குவதற்குரிய பூர்வாங்கப்பணிகளை பிரிட்டன் மேற்கொண்டு வருகிறதாம்!

சென்னை-வண்ணைத் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

		ரூ.	காசு
சிங்காரவேல் மன்றத்தார் நன்கொடை	...	5	75
காசிபுரம் கே. ராஜி மூலம்	...	62	25
காசிமாநகர் பொதுக்கூட்டத்தில்	...	19	94
இராயபுரம் என். ஆர். பாலையம்	...	10	00
பனைமரத்தொட்டி பலராமன்	...	5	00
காசிபுரம் இருசப்பன் மூலம்	...	17	44
காசிபுரம் சின்னமதுரை	...	5	00
பனைமரத்தெகட்டி முத்து மூலம்	...	119	00
சிங்காரவேல் மன்றத்தார் உண்டியல்	...	6	92
கே. வி. கே. சாமி படிப்பக ரங்கசாமி	...	4	00
பி. ஏ. ஆறுமுகம்	...	50	00
எம். சி. ரோடு கேசவன் வசூல்	...	30	00
வாலாஜாபேட்டை கந்தசாமி பிள்ளை மூலம்	...	10	00
நண்பர் ஒருவர்	...	1	00
ஆக மொத்தம்	...	346	30

சென்னை-சேப்பாக்கம் கே.வி.கே. சாமி படிப்பகம்

3-3-57-ல், சென்னை-சேப்பாக்சம் (40-வது வட்டம்) எண் 27, லாக் நகரில் தோழர் அலெக்சாண்டர் தலைமையில் மேற்படி படிப்பக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கா. அப்பாதுரையார் தலைவராகவும், ஜே. அலெக்சாண்டர் துணைத் தலைவராகவும், மு. பொன்னுரங்கம் செயலாளராகவும், பி. வீரராகவன் பொருளாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திறப்பு விழா

மேற்படி படிப்பகத் திறப்பு விழா திரு. மு. பொன்னுரங்கம் தலைமையில் நடைபெற்றது. புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், திரு. கா. அப்பாதுரையார், தோழியர் அலமேலு அப்பாதுரையார் ஆகியோர் படிப்பகத்தின் அவசியத்தினையும், கழகக் கொள்கைகளையும், பணியாற்றும் முறைகளையும் விளக்கிப் பேசினர்.

தோழர் கோ. இளவரசு படிப்பகத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

படிப்பகத் திறப்பு விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

சுந்தராபுரம் கே. வி. கே. சாமி படிப்பகம்

15—4—57ல், கோவை நகரையடுத்த சுந்தராபுரத்தில் கே. வி. கே. சாமி படிப்பக அமைப்புக் கூட்டம் தோழர் அரங்கசாமி தலைமையில் நடைபெற்றபோது, செயலாளராக புலவர் இராமசாமியும், துணைச் செயலாளர்களாக சு. க. கோபால், இரா. கந்தசாமியும், பொருளாளராக கலையரசனும், செயற்குழுவிற்கு அரங்கசாமி, பங்காரு, ஆறுமுகம், வீரப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செந்தனீர்புரம் கே.வி.கே. சாமிபடிப்பகதிறப்புவிழா

15-4-57 பகல் 2-30 மணிக்கு, (பொன்மலை) செந்தனீர்புரத்தில் 9/160 எண்ணுள்ள கட்டிடத்தில் கே. வி. கே. சாமி படிபபகத் திறப்பு விழா தோழர் கே. காமாட்சி தலைமையில் நடைபெற்றது; தோழர் அன்பில் தர்மலிங்கம் கொடியேற்றுவித்து கட்டிடத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் கே. ஏ. மதியழகன், இரா. செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

1,400 ஆலைதொழிலாளர் வேலை இழந்தனர்

ஆமதாபாத், மே 2—

இங்குள்ள இரண்டு துணி ஆலைகள் சென்ற கிழமையில் மூடப்பட்டதின் விளைவாக 1,400 - தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர்.

வேலை இழந்தவர்களுக்கு நஷ்டஈடுகூட தரப்படவில்லையாம்!

காட்டூரில் மாணவர் மன்றத் திறப்பு விழா

14—4—57 காலை 9 மணிக்கு, தோழர் ஏ. சாமியப்பன் அவர்களால் மன்றம் திறந்துவைக்கப்பட்டது; தோழர் கே. ஆர். சிரங்கன் தலைமையில் தோழர்கள் மாசிலாமணி, ராசு சொற்பொழிவாற்றினர்; பிறகு சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மேற்படி கூட்டம் சிறப்பாக முடிவுற்றது.

விதிக்குப் புறம்பாக கட்டணம் வசூலித்த கொடுமை

தடுப்பதில் தி. மு. கழகத் தோழர்கள் முயற்சி வெற்றி

திருப்பரங்குன்றம், மே 2—

திருப்பரங்குன்றம் கிராமத்தில் தினசரிச் சந்தை ஏலம் எடுப்பவர்கள், கட்டணம் வசூலிக்கும் விதிக்குப் புறம்பாக, தலைச்சுமையாகவும், சைக்கிளிலும் பொருள்களை விற்பனை செய்வோர்களிடம் ஒரு அணா முதல் நான்கணாவரை கட்டணமாக தினசரி வாங்கி ஏழை எளியவர்களைக் கொடுமைபடுத்தி வந்தனர்.

அதனை தடைசெய்ய, 24—4—57-ல் கழகத் தோழர் அரசுக்கண்ணன் தலைமையில், திருப்பரங்குன்றம் — திராவிடர் பகுத்தறிவு மன்றச் செயலாளரும், மற்றும் பல கழகத் தோழர்களும் ஊராட்சிமன்ற நிர்வாக அதிகாரியைச் சந்தித்து, இவ்வந்தியை விளக்கியபின், நிர்வாக அதிகாரி விதிக்குப் புறம்பாக கட்டணம் வசூலிப்பதற்குத் தடை விதித்தார். தற்போது நடமாடும் வாணிபர்கள் அச்சமின்மி வியாபாரம் செய்து வருகிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளாக இத்தடையேற்படுத்த பலர்முயன்றும் வெற்றிபெற இயலவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

(ந. நி.)

கலைத் துறையிலும் அரசாங்கம் தலையிடுமாம்!

புதுடில்லி, ஏப். 2—

முழுநீளப் படங்கள், அளவுக்கு மீறி நீளமாக எடுக்கப்பட்டு வருகின்றனவாம்.

எனவே, திரைப்படத் தொழில் துறையினரை கலந்தாலோசித்து படத்தின் நீளத்தை குறைக்க முடியுமா என்பதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

டாகுமெண்டரி படங்களின் நீளம் 2,000 அடிக்கு அதிகமாக இருக்கக்கூடாது என்று மத்திய பரிசளிப்புக் குழு கருதுகிறதாம்.

திரைப்பட பரிசளிப்பு விழாக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பெங்களூரில் - சேலம் தொகுதி தேர்தல் வழக்குநிதிக்கு சிறப்புகூட்டம்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி கலந்து கொண்டனர்

28—4—57 காலை 10 மணிக்கு, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில், பெங்களூர் குப்பி தியேட்டரில், சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்காக, பெங்களூர் மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

7—4—47-ல் சென்னை—திருவல்லிக்கேணியில் அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் ஆற்றிய சொற்பொழிவை 'டேப் ரெக்கார்டர்' மூலம் ஒலிபரப்பப்பட்டது.

பின்னர் நடிகத் தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசுகையில், கன்னட நாட்டிலே வசிக்கின்ற நம் தோழர்கள், தி. மு. கழகத்தின் மகத்தான கோட்பாடுகளை, கன்னட மொழி பேசும் மக்களிடை பரப்புவதற்குபல்வகையாலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அடுத்து பேசிய இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

தேனி தொகுதியில் நான் பெற்ற 31,404 வாக்குகள், 'நடிகன் தேர்தலில் நிற்கலாமா?' என்று கேட்டவர்களுக்கு நல்ல பதிலாகும். தேனி தொகுதிலே எனது தோல்வியை வெற்றியாகவே கொள்கின்றனர் ஜனநாயகப் பண்புகொண்டவர்கள்.

"தேர்தலுக்குப் பிறகு 150 கிளைக் கழகங்கள் தேனி வட்டாரத்தில் துவக்கும் அளவுக்கு அங்கு நமது கொள்கை வளர்ந்திருக்கிறது"

சிறப்புச் சொற்பொழிவின் மூலமும், உண்டியல் மூலமும் கிடைத்த ரூ. 125-ம் சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்கு தோழர் இராசேந்திரன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது; துணைச் செயலாளர் எம். மன்னர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

(ந. நி.)

நாவலர் படிப்பகம்

7—4—57ல் குடந்தை - துக்காம்பாளையம் தெருவில், மேற்படி படிப்பகத்தை, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திறந்து வைத்தார். அதுபோது தோழர்கள் ப. பச்சையப்பன் செயலாளராகவும், மா. காந்தி துணைச்செயலாளராகவும், கு. சா. கோவிந்தராசன் பொருளாளராகவும், மற்றும் செயற்குழு - பொதுக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

சேலம் மாவட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

கழகத்தை வலுவாக்க— தொழிற்சங்கங்கள் அமைக்கமுடிவு

சேலம், மே 1—

சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் ஏப். 29-ந் தேதியன்று நடைபெற்றது.

தேர்தல் முடிவுகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தி. மு. கழகத்தை இன்னும் பலப்படுத்தவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

நகர தி. மு. கழகச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன், மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் ப. இராமலிங்கம், தோழர்கள் ஆர். தாண்டவன், பெருமாள், பி. எம். குப்புசாமி, செகன்னாதன், வரதராசன் முதலிய தோழர்கள் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

சுமார் 90 மாவட்ட உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

விவசாயத் தொழிலாளர் சங்கம், மில் தொழிலாளர் சங்கம், இது போன்ற மற்ற தொழிலாளர் சங்கங்களை சேலம் மாவட்டத்தில் தி. மு. கழக சார்பில் துவக்கி நடத்த தீர்மானிக்கப்பட்டதுடன், சேலம் மாவட்டத்தில் எல்லாக் கிராமங்களிலும் தி. மு. கழகக் கிளைகளை துவக்க முடிவு செய்யப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 168 கிளைக் கழகங்கள் தற்பொழுது இயங்கிவருகின்றன.

திருச்சி மோட்டார் தொழிலாளர் மகத்தான வெற்றி

தொழிலாளர் தலைவர்கள் நன்றி

1—5—57 டி. எஸ். டி. பஸ் கம்பெனியில் தொழிலாளர்களின் 5 அம்ச கோரிக்கைகளைப் பெறுவதற்காக மறியலும், வேலைநிறுத்தமும் நடைபெற இருந்த; ஆனல் 30—4—57 மாலை 5 - மணிக்கு திருச்சி தொழிலாளர் அதிகாரி திரு. டி. இராமலிங்கம் முன்னிலையில் டி. எஸ். டி. நிர்வாகத்தினருக்கும்—தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் சமரச உடன்படிக்கை ஏற்பட்டதால் வேலைநிறுத்தம் திரும்பப் பெற்றது.

"மேற்படி டி. எஸ். டி. நிர்வாகம் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கிய பெருந்தன்மைக்காகவும், சமரச அதிகாரி எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகாகவும் பொதுமக்கள் காட்டிய ஆர்வத்திற்காகவும் எங்கள் மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்" என்று திருச்சி மோட்டார் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சங்கத் தலைவர் எம். எஸ். மணி அவர்களும், செயலாளர் எஸ். ஜி. கிருஷ்ணன் அவர்களும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

அன்பளிப்புகள்

15—4—57-ல் பொன்மலை தோழர் இராமையன் அவர்களின் குழந்தைக்கு அண்ணா அவர்களால் 'வெற்றிச்செல்வி' என பெயரிடப்பட்டதன் நினைவாக ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

22—4—57-ல் சிவபுரி தி. மு. கழகக் கூட்டத்தில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு சிவபுரி தி. மு. கழகம் ரூ. 2-ம், கொற்றங்குடி தி. மு. கழகம் ரூ. 1-ம் குமிராட்சி தி. மு. கழகம் ரூ. 1-ம், அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

19—4—57 நாசிங்கபுரம் கூட்டத்தில் தோழர் பெருமாள் அவர்களின் புதல்வனுக்கு, அண்ணா அவர்களால் 'பாண்டியன்' என பெயர் சூட்டியதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

பாலக்கரை பெரியசாமி 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

திருச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகச் செயலாளர் மூலமாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 20 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

ஆனதாண்டவபுரம் தோழர் கு. கோவிந்தராசு அவர்களால் 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

23-4-57-ல், சென்னை.வண்ணை மண்-94, எம்.சி. ரோடு 'சற்குணபில் பணியாற்றும் தோழர் ராமையா அவர்களால் தோழர் பெ. நடேசன் மூலம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

கோவை—சூலூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், புலவர் அறிவுடைநம்பி அவர்கள் மூலமாக தோழர் வணங்காமுடி அவர்கள் தனது திருமணத்தின் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

இராசா ரவிவர்மா 109-வது பிறந்த தின விழா

பொதுச்செயலாளர் கலந்துகொண்டார்

2—5—57 மாலை 5-30 மணிக்கு இராசா ரவிவர்மா 109-வது பிறந்த தின விழா, சென்னை ரவிவர்மா கலைக் கழகத்தாரால், எழும்பூர்—கெங்குரெட்டி தெருவில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. பி. டி. இராசன் அவர்கள் ஓவியக் கலையில் தமிழ் நாட்டு மக்களுக்கும்—மேனாட்டு மக்களுக்கும் உள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்டி, தமிழகத்தில் ஓவியக் கலை வளர ஆதரவு தருமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து சென்னையில் ரவிவர்மா கலைக் கழகத்தை நிறுவிய தோழர் கே. வி. வைத்தியநாதன் அவர்கள் விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துக்களைப் படித்ததுடன், ரவிவர்மாவின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய உணர்ச்சியூட்டும் ஓவியத்திற்கு இந்தியப் பேரரசு ஆதரவு தராததும் அன்றி, இழித்தும் பழித்தும் கருத்தறிவிப்பதையும் விளக்கிப் பேசினர்.

அடுத்து, தோழர் பழனி அவர்கள், சென்ற திங்கள் 30-ந் தேதி நடைபெற இருந்த, இவ்விழா சென்னை 'மியூசியம்' அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்காததால், இன்று நடைபெறுகிறதென்றும், இந்த விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் வரவேற்பு கூறி நன்றி தெரிவித்து உரையாற்றினர்.

இறுதியாக, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்விழாவை ஏற்பாடு செய்த கலைக் கழகத்தாரைப் பாராட்டியும், ரவிவர்மாவின் வழித் தோன்றலாக ஓவியங்கள் தீட்டும் தோழர் கே. வி. வைத்தியநாதன் அவர்களைப் பாராட்டியும், உணர்ச்சியுள்ள கலையும்—உணர்ச்சியற்ற கலையும், அழகு மிக்க கலையும்—அழகு இல்லாத கலையும் எவை எவை என்பதையும் விளக்கி, ஓவியக் கலையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டி, சங்க காலத்திலிருந்து தமிழகத்தில் ஓவியக் கலைக்குத் தந்த ஆதரவை சங்க நூல்களின் சான்றுகளோடு எடுத்துக்காட்டியதுடன், நல்ல கலைஞர்களுக்கும்—சிறந்த ஓவியங்களுக்கும் மக்கள் ஆதரவு தரவேண்டுமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் பழனி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

சென்னை — வண்ணை தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

5—5—57 காலை 9 மணிக்கு, 4-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், 112, சோலையப்பன் தெரு, கல்வாய் இல்லத்தில் நடைபெறும். பல முக்கியப் பிரச்னைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

சென்னை-மயிலை தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

5—5—57 காலை 9 மணிக்கு, மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில், தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெறும். அது போது, செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும், நினைக்கிற உத்தியோகம் கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்களாகவும் விளங்குகின்றன.

"தேசிய என்ற அடைமொழி தரப் பட்டதினாலேயே, தேசியக் கட்சித் தோழர்களின் தொகுதிகளிலேயே இந்த சமூக நல அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன.

"மின்சார விஸ்தரிப்புத் திட்டங்களை அமுல் செய்வதிலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. எங்கள் மாவட்டத்தில் 1947-ல் மனுப் போட்ட கிராமங்களுக்குக் கூட இன்னும் மின்சார வசதி தரவில்லை.

"மேலும், கிராமங்களுக்கு மின்சார வசதி என்பது வெறும் விளக்குகள் போட மட்டும் பயன் படுவதாக அமைந்தால் பலன் இல்லை. மின்சாரம் சிறு தொழில் வளர்ச்சிக்குப் பயன்பட்டாக வேண்டும்."

சென்னையில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குப்

பாராட்டு விழா

6—5—57 மாலை 6-மணிக்கு சென்னை — அமைந்தகரையில், சென்னை நகரில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு விழா நடைபெறும்.

அதுபோது அன்று அவர்களும் தோழர் மு. கருணாநிதி அவர்களும் பாராட்டுரை வழங்குவர்.

சென்னை — இளங்கோ இளைஞர் மன்றம் துவக்க விழா

5—5—57 காலை 9 மணிக்கு. மேற்படி மன்றத் துவக்க விழா, சென்னை—பூங்காநகர், ரவணையர் வீதியில், தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர் ஓ. இராசமாணிக்கம் அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைப்பார்.

வண்ணையம்பதி— தமிழ் இளைஞர் கழகம்

5—5—57 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், வித்துவான் திரு. இ. மு. ஆறுமுகம் (செட்டியார்) திருக்குறளில் 'அருளுடைமை' என்ற அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

உதகை நகர தி.மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

5—5—57-ல், மேற்படி உறுப்பினர்கள் கூட்டம், உதகை—கிரீன் பில்டிங்லுள்ள 118, எண்ணுள்ள இல்லத்தில், தோழர் த. நஞ்சுண்டன் தலைமையில் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

முசிரிவட்டம் — தண்டலை

வள்ளுவர் திடலில்

6—5—57 இரவு 7 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் :

சி. பசவலிங்கம்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

மு. பெ. முத்துக்கருப்பன்

ம. சோமசுந்தரம்

★

கல்வார்பட்டி :

அர்ச்சுனன் திடலில்

7—5—57 இரவு 8 மணிக்கு

பேசுவோர் :

என். வி. நடராசன்

பி. சமதர்மம்

மா. தங்கவேலர்

க. அந்தசாமி

இரவு 7-30 மணிக்கு, டபிள்யூ. பி. எ. எஸ். பாண்டியன் படிப்பகத்திலிருந்து, தோழர்கள் எல். ஆர். பரிபூரணம், ஜி. வெங்கடாசலம் தலைமையில், ஊர்வலம் புறப்படும்.

★

நவகிரி :

நகுல்பான் கோயில் திடலில்

6—5—57 மாலை 5-30 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் :

ஜெ. கமலேஸ்வரன்

துவக்குபவர் :

மா. மாணிக்கம்

கொடியேற்றுபவர் :

வை. விழிநாதன்

அண்ணா படத் திறப்பு :

இரா. ஆரியசங்காரன்

பேசுவோர் :

கோ. வில்லவன்கோதை

ம. புவியரசு

பெங்களூர்—இராமச்சந்திரபுரம் தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

5—5—57 காலை 9½ மணிக்கு, மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்னைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருவண்ணாமலை-கிழ்ணந்தூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

5—5—57 காலை 10 மணிக்கு மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் வ. சம்பந்தம் தலைமையில் அவரது இல்லத்திலேயே நடைபெறும்.

சென்னை—கல்விச் சங்கம்

5—5—57 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண்பள்ளியில், திரு.ச. வீ. குருசாமி தலைமையில், திரு. தெ. இரா. செயராமன் 'மக்கட் பண்பு' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

மே தின விழா

சென்னை :

5—5—57 காலை 10 மணிக்கு, இராயபுரம்—மார்க்கெட் சந்து, மக்கள் முன்னேற்ற மன்றப் பணிமனையில், தோழர் க. தேவராசன் தலைமையில் 'மே தினம்' குறித்து, தோழர்கள் குமாரசாமி, கேசவன், எஸ். ஜி. சாமி ஆகியோர் பேசுவர்.

சென்னை-கோடம்பாக்கம்

5—5—57 காலை 9 மணிக்கு, 35-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், மே தின விழா தோழர் வி. பி. தரணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆதிகேசவன், மா. செங்குட்டுவன், க. இளங்கீரன், சா. வில்லவன், மற்றும் பலர் பேசுவர்.

சிவகாசி :

5—5—57 அன்று நகர தி. மு. கழகச் சார்பில், சிவகாசி-தேரடி முன்பு மே தின விழாக் கொண்டாடப்படும்; அதுபோது, தொழிலாளர்களுக்கு குளிர்ந்த பானம் வழங்கப்படும்.

புதுவை :

5—5—57 மாலை 6 மணிக்கு, புதுவை தி. மு. கழகச் சார்பில், செஞ்சிச்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், மே விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் அ. பொன்னம்பலனார், எம். எஸ். சிவசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை—மணவழகர் மன்றம் துவக்க விழா

5—5—57 காலை 9 மணிக்கு, மேற்படி மன்றத்தை, சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை. தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில், திரு. ஓ. ரா. கிருட்டிணசாமி தலைமையில், திரு. அ. கிருட்டிணமூர்த்தி துவக்கி வைப்பார்; அதுபோது, திரு. வி. க. நூல்நிலையத் திறப்பு விழாவை திரு. அ. அருள் தங்கையாவும், பேராசிரியர் கா. நமச்சிவாயர் படிப்பகத் திறப்பு விழாவை, திரு. எஸ். எஸ். அருணகிரிநாதரும், டாக்டர் சி. நடேசனார் இரவு பாடசாலை திறப்பு விழாவை, தோழர் வி. முனுசாமியும், நக்கீரர் பட்டி மன்றம் திறப்பு விழாவை, வித்துவான் என். சண்முகமும் ஆற்றுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

மே

5 : நாகப்பட்டினம்
6 : தண்டலை
7 : பொன்பரப்பி
9 : சிங்காநல்லூர்
11 : ஈரோடு
12 : வேடிச்சிபாளையம்
13 : புரசவாக்கம் (சென்னை)

திருமணங்கள்

5—5—57 காலை 9 மணிக்கு, புதுவை—பாரதி வீதி, 47-ம் எண் இல்லத்தில், தோழர் ச. இராமராசா—தோழியர் இரா. சந்திரா வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் அ. பொன்னம்பலனார், எம். எஸ். இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

5—5—57 காலை 7 மணிக்கு சென்னைத் தோழர் கிருஷ்ணன்—தோழியர் இல்லாமல்லி வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் சு. பாலன் அவர்கள் தலைமையில் சென்னை—பெரம்பூர், கோபாலபுரம், எண் 7/3 வீதியில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் ஆர். ஜார்ஜ், எம். கன்னியப்பன், சி. ஆர். ஜெகதாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

5—5—57 காலை 8 மணிக்கு சென்னைத் துறைமுக 4-வது பாங்கிசாலை 22-வது எண்ணுள்ள இல்லத்தில், 12-வது வட்ட தோழர் ஏ. என்றி—தோழியர் சி. கே. சரோசா வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி மணிமொழியார், என். சிவாத்தினம், முல்லை-சத்தி, வளையாபதி-முத்துகிருஷ்ணன், அ. பொ. அரசு, தமிழழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

6—5—57 காலை 9 மணிக்கு சிங்காநல்லூர் — (பெருஞ்சேரியில்) தோழர் பி. சதாசிவம்—தோழியர் சுந்தரம்பாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் பி. வெங்கடகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

6—5—57 காலை 7 மணிக்கு, நல்லூர் கந்தம்பாளையம் - வள்ளுவர் இல்லத்தில், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர் ஏ. கே. ஆறுமுகம்—தோழியர் இலக்குமி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும்; தோழர்கள் ப. இராமலிங்கம், வி. காளியப்பன், சுந்தரம், ஏ. எஸ். இராமச்சந்திரன், என். கே. பி. வேலு, ஏ. நடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

க. அன்பழகன்

அவர்களுக்குப் பாராட்டு விழா

4—5—57 மாலை 6 மணிக்கு சென்னை—பெரியமெட்டு, ஸ்டிங்கர்ஸ் தெருவில் (அரசாங்க மெடிகல் ஸ்டோர் அருகில்) தோழர் ஆதிவீரன் தலைமையில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்த பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தவிர்க்கமுடியாத வேலை காரணமாக வேலூர் செல்வதால், தோழர் மு. கருணாநிதி அவர்கள் விழாவில் கலந்துகொள்வார். தோழர் வி. எஸ். கோவிந்தராசன், மற்றும் பலர் பாராட்டுரை வழங்குவர். தோழர் க. அன்பழகன் நன்றியுரை வழங்குவார்.

சென்னை 42-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்களுக்கு :

5—5—57 காலை 9 மணிக்கு, மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் - லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

★

5—5—57 மாலை 6-மணி : **கைத்தறி கண்காட்சி**

திரு. யூ. கிருஷ்ணராவ், சென்னை சட்டசபை சபாநாயகர் திறந்து வைப்பார்

,, மாலை 6-30 மணி : **பொதுக்கூட்டம்**

தலைவர் : திரு. சி. சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., நிதி அமைச்சர்

சொற்பொழிவாளர் : திரு. டி. செங்கல்வராயன், பி.ஏ., எல்.எல்.பி.

,, இரவு 7 மணி : **நடனம் :** நடராஜ்-சகுந்தலா குழுவினர்

6—5—57 மாலை 6 மணி : **பொதுக்கூட்டம்**

தலைவர் : திரு. வி. நஞ்சப்பா, ஐ.சி.எஸ்., டெக்ஸ்டைல் கமிஷனர்

சொற்பொழிவாளர்கள் :

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்.,

திரு. ஜி. கோவிந்தராசன் எம்.ஏ., பி.டி., ஆசிரியர் கல்லூரி, சைதை

இரவு 7 மணி : **நாடகம் :** 'பிரசிடெண்டு பஞ்சாட்சரம்'— எஸ். வி. சகஸ்ரநாமம் குழுவினர்

பிரவேசக் கட்டணம் கிடையாது

மனித இனம்

★

நான்காவது அனைத்து இந்திய கைத்தறி வாரமான இத்தருணம், மக்களினத்தை வாழ்த்துவதில் சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிறுவனம் பெரிதும் மகிழ்கிறது.

சென்னை மாநில கைத்தறியாளர் கூட்டுறவு சங்கம்—லிமிடெட்

பால்சுந்தரம் மாளிகை, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.